# செப்டம்பர், 2016 – எண்ணெய் பனை சாகுபடிக்கான ஆலோசனைகள்

- எண்ணெய்ப்பனையின் தண்டு அடிப்பகுதியில் இருக்கும் வேர்கள் நீர் மற்றும் சத்துக்களை துரிதமாக உறிஞ்சக்கூடியவை. எண்ணெய்ப்பனைக்கும் களைகளுக்கு இடையே நீர் (ம) ஊட்டச்சத்திற்கு போட்டி ஏற்படுவதை தவிர்க்க, இப்பகுதியை களைகள் இன்றி சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும்.

- ஊடுபயிராக தேர்ந்தேடுக்கப்படும் பயிர்கள், நீர், நிலம், ஊட்டச்சத்து போன்ற எந்த வகையிலும் எண்ணெய்ப்பனையுடன் போட்டியிடாத வகையில் இருக்க வேண்டும்.

- எண்ணெய்ப்பனையில் ஊடுபயிர் செய்யும் போது, எண்ணெய்ப்பனை மற்றும் ஊடுபயிருக்கு தேவையான நீர், ஊட்டச்சத்துகளை தனித்தனியே வழங்க வேண்டும்.

- எண்ணெய்ப்பனையில், முதல் மூன்று வருடத்தில் மஞ்சரிகளை நீக்குவது மிக முக்கியம். இவ்வாறு நீக்குவதால், பனையின் தண்டு மற்றும் வேர் நன்கு வளர்ச்சியடையும்.